உ

சிவமயம்.

சதாசிவ லீலா சரித்திரம்.

இஃது

சரசாலை

சு. பொன்னம்பலம் அவர்களால்

இயற்றப்பட்டது.

மெய்கண்டான் அச்சியந்திரசாலை,

99, ஆதிருப்பள்ளித்தெரு

கொழும்பு.

1929.

விலை] [சதம் 40.

உ

சிவமயம்.

நூன்முகம்.

மிக்கசீ ரிலங்கையின்பால் மேன்மைகொண் டேவிளங்கும்
தக்கவீர் சாதியாந் தமிழர் சிங்களவ ரானோர்
பக்குவ மாய்மணந்தே பண்பினி லொன்றாய்வாழ
இக்கதை செப்பலுற்றே னென்மனத் தேநினைந்து.

வேறு.

காலில் நின்றிடக் கற்கிலாப் பாலகன்
ஏறும் பந்தய மோடிட வென்றெனல்
போலு மாமரோ புல்லறி வேனுரை
நூலுஞ் செந்தமிழ் நுண்ணறி வோர்கட்கே

சொல்வ தொன்றுள தூய தமிழ்மொழி
மெல்லி யல்மிசை மேவுதற் கிவ்வழு
பல்பெரும் புகட் பாவை யிலங்கையின்
செல்வ ரொற்றுமைச் சிந்தனை காரணம்.

குற்றமே குறை யின்றிக் குழுமினும்
சிற்றறி வினிற் செப்பினு மிக்கதை
பற்றினு லெடுத் தோதிடும் பண்பினாற்
கற்றவரிது கண்டு களிப்பரே.

ச. பொன்னம்பலம்.

உ

சிவமயம்.

தோத்திரங்கள்.

காப்பு.

ஐந்துகரத் தோனை யானைமுகங் கொண்டவர்
சிந்தையில்வைத் தன்பாதஞ் செப்புகிறேன்—சீராக்காய்
தீதில் சதாசிவனுஞ் செப்பரிய லீலாவுங்
காதலா லேவிளைத்த கதை.

விநாயகர் துதி

முத்தகணபதியே முகத்திற்கைகொண்டவனே
காத்திடுவாயிக்கதையை காசினியிற்பாடுதற்கு
சிறியேனுடைமொழியைச் சிறப்பாக்கிவைப்பதற்கு
அறியேனுடைநாவில் ஐங்கரனேவாருமையா
ஈசனுடைமைந்தா என்னாவிற்றானிருந்து
மாசொன்றும்வாராமல் வையம்பிழைசொல்லாமல்
என்சொல்லையுன்சொல்லா யேற்றுமேதானிருந்து
அன்புடன்பாடிடுவோர் யம்பிகைபெற்றவனே
நம்பிக்கைவைத்தேனே நானுமுன்மீதினிலே
தும்பிக்கைகொண்டுமே துன்பங்கள்வாராமல்
சதாசிவலீலாவின் சரிதத்தைப்பாடிவிட
நிதானந்தந்திடுமே நின்பாதம்போற்றுகிறேன்

சிவசுப்பிரமணியர் துதி.

ஆறுமுகம்பெற்ற வரனுடைமகனே
ஏறுபோலசுரர்கள் நிலையைக்குலைத்தவனே
கந்தசுவாமியே கடவுளேயென்னாவில்
வந்துகுடியிருந்து வலியெனக்குத்தந்திடுவாய்
சின்னவறிவுடையேன் செப்பிவிடவின்னூலே
பன்னிருகையோனே பழுதொன்றும்வாராமல்
குற்றங்கள்வாராமற் குவலயம்பிழைசொல்லாமல்

நற்றமிழீய்ந்துமே நம்முடைநாவிருந்து
உன்மொழியைப் போலவேயுவப்புடனெல்லோரும்
பன்முறையிக்கதையைப் பாடிமகிழ்ந்துவிட
பாலனேகந்தா பரமனுடைநன்மைந்தா
வேலனேயுன்பாதம் விருப்பியேயென்சிரத்து
போற்றினேன்வைத்தையா பூவைபிருபாகமுள்ளாய்
காப்பாயேயென்சொல்லைக் கதையினைப்பாடிவிட

சரஸ்வதி துதி.

வெண்டாமரையினில் வீற்றிருக்கின்றவளே
பண்பாகவிக்கதையைப் பாடிவிடவென்னாவில்
அன்போடுவந்திருந்து வடியேற்கருள்புரியாய்
இன்பமுடனிக்கதையை இசைவாகப்பாடுதற்கு
நான்முகன்தேவியரே நம்முடைநாவில்வந்து
நூன்முகந்தொடங்கியே நும்முடைநன்மொழியாய்
இருந்துமேபாடி இக்கதைமுடியுமம்மா
சொரிந்துமேநற்றமிழைச் சுவையீய்ந்தேயெல்லோர்க்கும்
கலைகளுக்கெல்லாமே கலையாகநின்றவளே
தலையினிலுன்பாதந் தாங்கிடுமெந்தனை
உலகந்தனில்யாரும் ஓர்பிழையுஞ்சொல்லாமல்
நலமுடனிக்கதையை நாடியேயெங்குங்கற்று
சந்தோஷத்துடனுமே சஞ்சரிக்கச்செய்திடுவாய்
மைந்தனுனைத்தொழுதேன் மறைகளைத்தானேதந்த
அயனுற்குமேமிக அருமையாயுள்ளவளே
தயையினைச்செய்துமே சரஸ்வதியேவந்திடுவாய்
பாலனுடைநாவிற் பரந்துமேதானிருந்து
ஞாலத்தாரின்பமுற நற்கதையாய்ச்செப்பிடம்மா

சதாசிவலீலா சரித்திரம்.

தமிழர்க்குப்பெரியவராம் தயாபரச்சதாசிவனார்
பிறந்தாரியாழ்ப்பாணம் பெற்றதாய்தந்தையற்கு
சிறந்தபுகழோடு திரவியங்கள்பெற்றாரே
கல்விக்குமோரணியாம் கலைகள்பலகற்றபின்னர்
செல்வச்சிரஞ்சீவி சிறப்போடுவாழ்வதற்கு
நல்கினானெம்மரசன் நமக்கீயாப்பதவிதன்னை
நீதிபதியாகவென்று நியமித்தானெம்மரசன்
அன்போடுதாள்பணிந்து அப்பதவிபெற்றுமவர்
சிங்காசனத்தேறிச் சிறப்போடுநீதிமுறை
செங்கோலரசனுக்குச் செய்துவருகின்றாரே
கண்டோர்களெல்லோரும் கைதொழுகின்றார்கள்
பார்த்தோர்களெல்லோரும் பயமுடனிற்பார்கள்
வந்தோர்களெல்லோரும் வணக்கமுடனிற்பார்கள்
எங்குஞ்சதாசிவற்கு இசைந்தபுகழ்பரவுகுதே
இலங்காபுரிமுழுதும் இவர்நாமம்பேசுகிறார்
சதாசிவப்பிரபுவவர் தமிழ்மணியென்றுசொல்வார்
மாதாபிதாவிற்கு வாய்த்தமகனென்றுசொல்வார்
நீதிபதியாக நியமித்தார்கடவுளென்பார்
பூமிக்குவாய்த்தவொரு புத்திரனுமிவனென்பார்
நாமத்தைச்சொன்னாலும் நமக்குண்டுசெல்வமென்பார்
கோபத்தைவென்றவொரு குலமகனிவனென்பார்
வாயினில்வந்தபடி வாழ்த்திவிடுகின்றார்கள்
பேச்சினில்வந்தபடி பெருமையைச்சொல்வார்கள்
மரியாதையிவ்வாறு மன்னவற்குச்செய்துவர
கண்டிமாநகரத்துக் களங்கமிலாச்சதாசிவனும்
கொண்டார்பலபேரைக் குறைவில்லாநேசருமாய்
சிங்களத்துரைமாரும் சிறப்புள்ளபறங்கியரும்
இங்கிலிஷ்காரர்களும் எம்மரியதமிழர்களும்
பெரியபதவிகளைப் பெற்றுமேவாழ்பவர்கள்
ஐசுவரியங்கள் அதிகமாய்க்கொண்டவர்கள்
கல்வியறிவிலே கனக்கவேதேர்ந்தவர்கள்

எல்லோரும்நண்பர்களாய் இருந்தார்சதாசிவற்கு
விருந்திற்குவாருமென்று வேண்டியழைப்பார்கள்
வந்துபிடிப்பார்கள் வாருமெந்தன்வீட்டிற்கென்று
சிந்தைகளிப்புறுவார் சிவநாமன்போனவுடன்
சிகறற்குடியுமென்பார் சிற்றுண்டியுண்ணுமென்பார்
காப்பிபருகுமென்பார் கடதாசியாடுமென்பார்
அன்னம்புசியுமென்பார் அருங்கீதங்கேளுமென்பார்
பியானோவைக்கேளுமென்பார் பிட்டிலெவ்வாறுஎன்பார்
இந்தமரியாதை இயற்றுகிறநேசர்களே.
தம்முடையவீட்டிற்குத் தயவோடுங்கூப்பிடுவார்
ஆடல்களும்பாடல்களும் அங்குமேவைப்பார்கள்
விருந்துமளித்திடுவார் விதம்விதமாய்நேசர்கட்கு
உபகாரம்பலவாக உத்தமனார்தானளிப்பார்
வீட்டிற்குப்போனவர்கள் வெறுங்கையுடன்திரும்பார்கள்
பிச்சைக்குப்போனவர்கள் பெரிதும்மனங்களிப்பார்
அன்னமென்றுபோனவர்கள் அகத்தில்மிகமகிழ்வார்
அடேயென்றபேச்சு அவர்வாயிற்றான்வாராது
கடும்வார்த்தையானவெல்லாம் கண்டவரைநாணிவிடும்
எல்லோற்குமினிவாக எப்பொழுதும்தானுரைப்பார்
இந்தவிதமாக வெங்கள்சதாசிவனார்
மங்களத்தினோடிருந்து வாலிபச்சதாசிவனார்
கண்டிமாநகரத்திற் களியோடுவாழையிலே
ஒவ்வொருநாளும் உலாவிற்குச்சென்றிடுவார்
வீதியுலாவிடுவார் விலையுயர்ந்தகாரினிலே
சுற்றிவருவாரே தொல்பெருநகரமதை
கண்டிடும்கன்னியர்கள் காமனிவனென்பார்கள்
பார்த்திடும்கன்னியர்கள் பாஞ்சோதியழகென்பார்
கேட்டிடும்கன்னியர்கள் கிலேசமுறுவார்கள்
ஆசைகொண்டுகன்னியர்கள் அனைவோருமின்னகரில்
தேசவுலாவிற்குத் திறல்மன்னன்வருவனென்று
வீதியுலாவிற்கு விறல்மன்னன்வருவனென்று
மேனிமினுக்கியவர் மென்முகம்தானழுத்திப்
பட்டுப்பருத்தியெல்லாம் பாங்காயுடுத்துமவர்

பெண்டிரையும்பிள்ளையையும் பெருமையுடன் தானழைத்து
நீதிமகனே நிறைவுள்ளமன்னவனே
கண்டிமுழுவதையுங் கட்டியுமாள்பவனே
என்மனைக்குவாய்த்தவள் இவளாவாளென்றுசொல்லி
காட்டியபின்மனைவியும் கைதொழுதுதான் துதித்தாள்
அப்போகுலத்துங்கர் அழகரசிலீலாவை
காட்டினார்மகளென்று கடவுள்தந்தபாக்கியத்தை
கண்டானேமன்னவனுங் கண்களிமைப்பொழிந்த
பார்த்தவுடன்மன்னவனும் பரவசம்ஆகினானே
இவ்வுலகக்கன்னியல்ல என்றுமேயெண்ணலுற்றான்
ஆச்சரியந்தெளிந்துவிட அரைநிமிடஞ்சென்றதுவே
கண்களிமைத்துவிடக் கணநேரந்தானேசென்ற
காதலில்வீழ்ந்தானே கரையில்லாச்சாகரத்தில்
அன்பினைத்தானேகொண்டான் ஆழியுந்தோற்றுவிட
மையலில்வீழ்ந்தானே மன்னனுங்கண்டவுடன்
மின்னலைப்போலேவந்த மெல்லியலைக்கண்டவுடன்
மன்னனுமெண்ணலுற்றான் மனத்தினிலிந்தவிதம்
எங்கும்நான்காணலையே இந்தவழகுதனை
கும்பிட்டாற்றானுமென்ன கோதையிவளைநானும்
மணக்காதிவளைவிட்டா வையகத்தில்நானிருக்கேன்
கல்யாணஞ்செய்யாட்டாக் காசினியில்வாழ்வுஇல்லை
பெண்ணென்னவேகொள்ளாட்டாப் பேந்துவிருப்பதில்லை
அன்பென்மேற்கொண்டாளோ அரிவையும்நானறியேன்
காதலில்வீழ்ந்தாளோ கன்னியாளென்மீது
என்றுமேபெண்ணையிலே லீலாவின்கண்களும்
மன்னனுடைகண்களில் மாட்டியேகொண்டன
கண்ணாலேகண்பார்த்துக் காதலறிந்துகொண்டார்
ஆசையுடன்பார்த்து அவள்மனத்தைத்தானறிந்தார்
அப்போதுலீலாவும் ஐயமிகவேகொண்டு
அன்பென்மேற்கொண்டானோ அழகிற்கரசனிவன்
மன்னனிவனில்லாட்டா வாழ்வுஎனக்குவில்லை
பூமியிலென்னபலன் புருடனிவனல்லாட்டா
ஐயையோதெய்வமே அடியேற்குத்தானருளாய்

கூட்டியேபதந்திடுவாய் குஞ்சரமானவனே
இந்தவிதமாக வெண்ணிக்கலங்கையிலே
காதலரிருபேருங் கலங்கியிருக்கையிலே
மன்னனும்மங்கையும் மனம்பதறித்தானிருக்க
எல்லாமணிவகுத்து எங்கள்குலத்துங்கர்
மேசையலங்கரித்து மினுக்கானபட்டாலே
தங்கத்திற்றனைசெய்த தாம்பாளம்மேலேவைத்து
பொற்கலங்கள்வைத்துவங்கு போசனந்தானையிட்டு
மன்னனைத்தானழைத்து மாண்மையுடன்விருந்து
சாப்பிடவென்றுமே சங்கையுடன்கூட்டிச்சென்றார்
மேசையைச்சுற்றியங்கு மேன்மைவிருந்தாளியுடன்
எல்லோருந்தானிருந்து இன்பத்துடனேமிக
போசனந்தானையுண்டார் புகழ்மிகக்கொண்டவர்கள்
அன்புடன்தானிருந்து அருந்தினரெல்லோரும்
ஆறுசுவைகளுடன் அன்னமருந்தினார்கள்
பத்துவிதக்கறியும் பதினெட்டுப்பச்சடியும்
பருப்புடன்நெய்யும் பலவிதப்பொரியல்களும்
சாம்பாரொடுகுழம்பும் தயிருமேதானையுண்டு
தேனுடன்கதலிபழம் சேர்த்துமேதானையுண்டு
இரசத்தொடுசோதியும் எல்லாமேயுண்டபின்னர்
பாயசம்தான்குடித்துப் பட்சமுடனேயெழுந்தார்
விருந்துமேயுண்டபின்னர் வீரச்சதாசிவமும்
இருந்துநெடுநேரம் இன்பமுடன்தான்கதைத்தார்
குலத்துங்கரோடுமவர் கொண்டநல்மனைவியொடும்
இலட்சுமிலீலாவொடும் எல்லோருடனுமங்கு
இன்பமாய்த்தானிருந்து இனியமொழிபேசினரே
அன்புடன்தானிருந்து ஆசைமொழிபேசினரே
சந்தோஷத்தோடிருந்து சம்பாஷணைகள்செய்தார்
இந்தவிதமாக எல்லோருமின்பமுடன்
ஒருவருடனொருவர் உவந்துமேதான்கதைத்தார்
நேசத்தைக்காட்டியங்கு நெடுநேரந்தானிருந்து
போய்வாரேனென்றுசொல்லிப் போற்றுதல்செய்தாரே
வீட்டுக்குப்போறேனென்று வீரனுந்தானேகூறி
கூட்டியிருகரத்தைக் கும்பிட்டுத்தான்துதிக்க

எல்லோருந்தான் துதித்தார் இருகரமுங்கூப்பியங்கு
இந்தவிதமாக எங்கள் துரைமகனும்
சந்தோஷவிடையைப்பெற்றுத் தன்வீடுபோனானே

காதலர் கல்யாணஞ்செய்ய வாக்களித்தல்.

வீட்டிற்குப்போனவுடன் வீரச்சதாசிவனும்
உடுப்புகள்மாற்றிவிட்டு உட்கார்ந்தாரீச்சாரில்
மனத்தினிலெண்ணுற்றார் மங்கையொருத்தியினை
அழகிற்கரசியினை ஆவலுடனெண்ணுற்றார்
நேசமொழியாளை நினைத்தாரே தன்மனதில்
ஆசைமொழியாளை அகத்தினிற்றானே வைத்தார்
பெருமையுடையவளைப் பேணினார் தன்மனத்தே
ஆசைகொண்டுமாய்கிறார் ஆடுமயில்லீலாவில்
இவ்வாறுசிலநாளாய் எங்கள்சதாசிவமும்
காதற்சமுத்திரத்துக் கரைகாணாதமிழ்ந்தினரே
பெண்ணாசைகொண்டதினாற் பித்தன்போலானாரே
காமன்கணையினாற் கலங்கித்திரிகிறாரே
எப்போதும்மனத்தினில் எண்ணுற்றார்லீலாவை
இருக்கையிலேயெண்ணுவார் இனியமொழிச்சுந்தரியை
நடக்கையிலேயெண்ணுவார் நாணமுடைகற்பாளை
காலையிலே நினைப்பார் கானகமயிலாளை
மாலையிலே நினைப்பார் மதிநுதல்மங்கையினை
இந்தவிதமாக எங்கள்சதாசிவனார்
காதலைக்கொண்டதினாற் கனக்கவேதான்வருந்தி
அன்பினைவைத்ததினால் அகத்தில்மிகவும்நொந்தே
என்னைமணஞ்செய்வாளோ லீலாவுமானறியேன்
காதல்மிகவுமுண்டோ கன்னிகைக்குநானறியேன்
அழகிற்குறைந்துளனோ அரிவைமனந்தான்கவர
சுந்தரத்திற்றான்குறைவோ சுந்தரியைத்தான்மயக்க
என்னவிதமாக விருக்கிறதோவென்விதியும்
அரனாருடையெழுத்து அறியேனேயானுமையோ
சிவனாருடையெழுத்துச் சிறியேனுக்கெவ்விதமோ
ஆனாலும்வேறுபெண்ணை அடியேன்மணப்பதில்லை
உலகத்துவேறுபெண்ணை ஒருநாளும்பார்ப்பதில்லை

மாற்றொருமங்கையினை மனத்தினிற்றானுமெண்ணேன்
அன்புமேகொண்டிருப்பாள் ஆரணங்குமென்மீது
காதலறிந்தேனே கண்களைப்பார்த்தவுடன்
வெட்கமிலாமலுக்கு விரும்பியெனைப்பார்த்தாளே
ஆசையுடனெந்தன் அழகினைத்தானேபார்த்நாள்
காதலில்வீழ்ந்திருப்பாள் கட்டாயந்தானுமென்று
பலவிதமாய்நினைத்துப் பதறுவார்தன்மனத்தே
சந்தேகங்கொண்டிடுவார் சரியாகுமென்றிணைப்பார்
வாய்க்குமோவென்றிணைப்பார் வாராதோவென்றிணைப்பார்
இந்தவிதமாக இருந்துள்ளம்வருந்தையிலே
குலத்துங்கரோடுமே கொண்டாட்டமதிகம்வைத்து
நட்பையதிகம்வைத்து நாடோறும்போய்வருவார்
பலநாளுமவர்வீட்டுப் பக்கத்தைநாடிடுவார்
எல்லோருடனுமங்கு இன்பமொழிபேசிடுவார்
லீலாவுடனேசென்று எப்போதுந்தான்கதைப்பார்
தனியவிருந்துமே தையலுடன்பேசிடுவார்
இன்பத்துடனிருந்து இருபேரும்பேசிடுவார்
இவ்விதம்சிலநாட்கள் ஏகியுந்தானேவர
இருவருடைமனமும் இரண்டற்றுப்போயிற்றே
காணாதநேரத்திற் கலங்கித்தவிப்பார்கள்
கண்டுகொள்ளும்நேரத்திற் களிகொண்டிருப்பார்கள்
ஒருவர்மீதொருவர் ஒப்பில்லாவன்புவைத்து
காதலரிருபேருங் கனக்கவேயன்புவைத்து
இந்தவிதமாக இருக்கின்றநாள்தனிலே
ஓர் நாட்சதாசிவம் உரைத்திட்டார்லீலாவிற்கு
என்னைநினைத்தாயோ எப்பாலும்லீலாவே
அன்பென்மேல்வைத்தாயோ ஆசைக்குகந்தவளே
விருப்பம்நீகொண்டாயோ வெருள்மானைப்போன்றவளே
கருத்தினில்வைத்தாயோ காதற்கரும்பாளே
அழகிற்கழகுசெய்யும் ஆரணங்கேகேளுமடி
உன்போலக்கன்னியரை ஓரிடத்துங்காணவில்லை
ஐரோப்பாக்கண்டத்தும் அரிவையரைக்காணவில்லை
தென்னிந்தியாவிலுந் தெரிவையரைக்காணவில்லை

சீமைக்குப்போயும்நான் சிறப்பாளைக்காணவில்லை
உன்மேலேயன்புவைத்தே னொப்பில்லாப்பெண்ணரசே
கண்டவுடன்நானும் காதலில்வீழ்ந்தனடி
ஆசைகொண்டநாள்முதலாய் அன்னத்தையெண்ணுதில்லை
காதல்கொண்டநாள்முதலாய்க் கண்ணுறக்கம்வருகுதில்லை
நேசம்வைத்தநாள்முதலாய் நிலையாச்சேயுன்ரூபம்
உன்னுயிருமென்னுயிரும் ஒன்றாகத்தோற்றுதடி
ஓர்நொடிப்பொழுதேனும் உன்னாசைநான்மறவேன்
என்னைக்கலியாணம் ஏந்திழையேசெய்வாயோ
மணஞ்செய்துநாங்கள் மகிழ்ந்திருப்போம்வாராயோ
திருமணஞ்செய்து சிறப்போடிருப்பமடி
வாயைத்திறந்துநீ வார்த்தையொன்றுசொல்லிடுவாய்
கனிவாய்திறந்துவென்னைக் கணவனென்றுரைத்திடுவாய்
நாணமுறுவாயாலே நாதனென்றுகூறுமடி
என்றுபலவாறாய் எங்கள்சதாசிவனார்
தன்னன்புரைத்துநின்று தாழ்மையுடன்கேட்டாரே
அப்போதுலீலாவும் ஆரணங்குசொல்லுகிறாள்
கன்னியாள்லீலாவும் காதலொழித்துக்கொண்டு
இந்தவிதமாக எடுத்துமுரைசெய்தாளே
என்னையொருபொருளாய் ஏன்நினைத்தீர்மன்னவரே
அறிவிற்குறைந்தவள்மீ தாசைகொண்டதேதாலே
கல்வித்திறமையிலாக் கன்னியினையேனுமக்கு
புகழேந்தும்மன்மதா பொய்யுமக்குப்பேசவில்லை
அழகேந்தும்மன்னவரே ஆர்தானுமைவிரும்பார்
இந்தவிலங்கைதனில் எளிர்ப்பெண்கள்மெத்தவுண்டு
சுந்தரப்பெண்களிங்கு தொகையாயிருக்கிறாரே
வானத்துப்பெண்களிங்கு வகையாயிருக்கிறாரே
தேவலோகப்பெண்களிங்கு தேடிப்பிடிக்கலாமே
என்னிலுமழகான எத்தனைபெண்களுண்டு
காதலுமக்குவில்லைக் கட்டழகாவென்மீது
உண்மையில்நேசமில்லை உரைத்தீரேபொய்மொழியை
பரிகாசம்செய்கிறீரே பாவையுமக்கேதுசெய்தேன்
அன்புமக்கில்லையையா ஆசைமொழியேனுரைத்தீர்

பொய்யுரைசெய்யலாமா புகழையணிகொண்டவரே
கபடம்நேர்சொல்லலாமா கல்வியிற்சிறந்தவரே
என்றுமேயிவ்வார்த்தை ஏந்திழையாள்கூறினளே
அப்போசதாசிவனும் அன்போடுதாள்பணிந்து
பொய்யென்றுவெண்ணாதே பூவையேயென்மொழியை
பரிகாசஞ்செய்யவில்லைப் பாவையேயுன்னோடு
உண்மையுனக்குரைத்தே னொப்பில்லாப்பெண்ணரசே
அழகுடையரிவையர்க்கு அரசுசெய்யும்பெண்மயிலே
உன்னைவெல்லக்கன்னியர் உலகத்திலில்லையடி
தேவலோகஞ்சென்றாலுந் தேடமுடியாதுவெடி
ஆசைகொண்டேன்பெண்ணரசே அடிமையாய்க்கொண்டி
மாற்றொருகன்னியரை மதித்துமேபார்க்கேனடி [டுவாய்]
வேறொருபெண்ணை விரும்பவும்மாட்டனடி
சத்தியர்இதுவென்று சதாசிவம்தாள்வணங்க
அப்போதுலீலாவும் அவர்பதத்திற்றான்விழுந்து
நமஸ்காரஞ்செய்தாளே நாதாவேயென்றுசொல்லி
பத்தாவேயென்றுசொல்லிப் பாவையுந்தான்வணங்கி
கட்டியவர்பதத்தைக் கன்னியாள்முத்தமிட்டு
கண்டவுடனென்துரையே காதலிற்றான்விழுந்தேன்
பத்தாவுமென்றுவும்மைப் பார்த்தவுடன்றான்நினைத்தேன்
அந்தநாள்முதலாக ஆருயிரும்நீரானீர்
என்னுயிர்இங்குவில்லை இருக்கிறதுவும்மிடத்தே
என்றுமேயிந்தமொழி லீலாவுஞ்சொல்லிடவே
மன்னன்சதாசிவமும் மங்கையைத்தானணைத்து
முத்தமளித்தாரே முழுமனமுந்தான்குளிர
கட்டிமுத்தமிட்டார்கள் காதலிருபேருங்
அன்போடுபற்றியங்கு ஆலிங்கனஞ்செய்தார்
ஆசைமிகுதியால் அளவில்லாமுத்தமிட்டார்
நேசமிகுதியால் நெடுநேரம்முத்தமிட்டார்
முகத்தோடுமுகமணைந்து முத்தம்பலவிட்டாரே
இவ்வாறினியமுத்தம் இருபேருமிட்டபின்னர்
அப்போதுலீலாவும் ஆரணங்குசொல்லுகிறாள்
அன்பேயென்னாருயிரே ஆசையுள்ளவென்துரையே

செல்லம்மிகவேகாட்டிச் சிறியபிராயந்தொட்டு
அன்புமிகவேவைத்து அறியாச்சிறுவயதில்
எடுக்கிவளர்த்தார்கள் எப்போதுந்தோளில்வைத்தார்
தொட்டிலிலும்மெத்தையிலுந் தோளிலுந்தானேவைத்து
கட்டியேமுத்தமிட்டுக் காதலித்தேயுமென்னை
இட்டமுடன்வளர்த்து எழிராகவாபரணம்
பொன்னாலேதேகமெங்கும் பொலிவாயலங்கரித்து
முத்தாலலங்கரித்து முழுமணியுந்தானேசூட்டி
என்னைவளர்த்தார்கள் இளமைம்பருவந்தொட்டே
கோபித்துப்பேசார்கள் கொஞ்சங்குறைசொல்லார்
ராசாவேயென்றுசொல்லி எப்போதுங்கூப்பிடுவார்
துரையென்றுசொல்வதல்லாற் சும்மாபெயருஞ்சொல்லார்
செல்வமேபாக்கியமே சீரானமுத்தேயென்று
நல்லமொழிகள்சொல்லி நம்மிலேயன்புவைத்து
வளர்த்தோருடைமனத்தை வருந்தவிடலாமா
நன்றிசெய்தபேர்களுக்கு நான்பிழைசெய்யலாமா
அப்படிச்செய்தாக்கா லாரும்பிழைசொல்வார்
பெண்ணினைத்தான்விரும்பி பெற்றோரைவெறுத்தானென்று
வளர்த்தோரைவிட்டுமே மங்கைபின்சென்றானென்று
உலகெங்கும்பேசி உரைப்பாரிழியவிதம்
ஆனாலும்பெற்றவர்க்கு அன்புடைலீலாவை
மணஞ்செய்துவைத்துவிட மனமுமோதுண்டாயில்லை
விருப்பஞ்சிறிதுமில்லை விவாகத்தைச்செய்துவைக்க
கூட்டியேவைத்துவிடக் கொஞ்சமனமுமில்லை
எந்தவழிபோனாலும் இடராகத்தான்முடியும்
இந்தவிதச்சங்கடத்தி லிறந்துவிடுதனலம்
மாற்றோரைவருத்தலிலும் மரித்துவிடுதனலம்
என்றுபலவாறாய் இருதயம்புண்ணாக
மதியுந்தடுமாற மனதிற்கலங்கலுற்றார்
இராப்பகலாகவும் இதையேதானெண்ணலுற்றார்
உறக்கம்வருவதில்லை உண்பதுந்தானேயில்லை
எந்நேந்தநேரத்தும் எண்ணியேயிந்தவிதம்

துக்கங்குடிகொள்ளத் துயரக்கடலினிலே
மூழ்கிக்கிடந்தாரே முடிவொன்றுந்தெரியாமல்
இந்தவிதமாக ஏழெட்டுநாட்கள்சென்ற
வாரமுமொன்றுசென்ற வந்தபின்னிக்கிலேசம்

சதாசிவத்தாலெல்லோர்க்கும் கலக்கம்.

இந்தவிதமாக இருந்துமனம்வருந்தி
அகத்திற்கலக்கமுற்று அதிகம்வருந்தையிலே
ஓர்நாட்சனங்களெல்லாம் ஒழுங்காகக்கோட்டினிலே
வழக்குத்தொடுப்பவரும் வந்திட்டசாட்சிகளும்
எதிரிபலபேரும் எளிர்பார்க்கவந்தவரும்
நியாயத்தில்வாதங்கள் நிரம்பவேசெய்வோரும்
எல்லோருமாகவே எங்கள்சதாசிவரை
மன்னன்வருவாரென்று வழக்குவிளங்குதற்கு
நீதியளிப்பதற்கு நீதிமான்றன்வரவை
எல்லோருமாகவே எதிர்பார்த்திருக்கையிலே
மன்னனைக்காணவில்லை மணிகள்பலவுஞ்சென்ற
நேரமும்பிந்தியது நீதிமான்வாரவில்லை
அப்போசனங்களெல்லாம் ஆவல்மிகவேகொண்டு
தங்கியிருக்கையிலே சதாசிவர்க்குச்சுகமில்லை
என்றமொழிகேட்டு எல்லோருந்தானேநொந்தார்
நியாயஸ்தர்சிலபேர்கள் நீதிமானைப்பார்க்கவென்று
சுகவீனம்பார்க்கவென்று சுறுக்காகவோடிச்சென்றார்
வருத்தத்தைப்பார்க்கவென்று மன்னனிடந்தானேசென்றார்
கண்டாரேமன்னனையுங் கட்டிலொன்றுமீதினிலே
பார்த்தாரேமன்னவன் படுத்துமிருக்கிறதை
வந்தோரைத்தான்பார்த்து மரியாதைசெய்யாமல்
படுத்துவிருக்கிறதைப் பார்த்திட்டநேசர்களும்
சங்கதியென்னவென்று சதாசிவத்தின்கிட்டச்சென்று
மன்னனறிவிலாது மயங்கியிருக்கிறதை
நெருப்பாகக்காச்சலும் நிரம்பவேகாய்கிறதை
கண்டுமேயெல்லோருங் கலக்கமிகவேகொண்டு

*பார்த்திட்டநண்பரெலாம் பரிதாபப்பட்டுமிக
ஊக்கத்துடனேசென்று உயர்வானடக்ரர்மாரை
ஐந்தாறுடக்ரர்மாரை அதிசீக்கிரத்துடனே
அழைத்துமேகொண்டுவந்தா ரன்புமிகக்கொண்டவர்கள்
வந்துமேபார்த்துவிட்ட வைத்தியர்களனைவோரும்
எல்லோருஞ்சொன்னார்கள் இரம்பக்கடினமையென்று
பிளேத்தலருமையென்றும் பெலனனவருத்தமென்றும்
சன்னிவருத்தமென்றுஞ் சதாசிவர்க்குச்சொன்னார்கள்
கேட்டுமேயெல்லோருங் கிலேசமிகவேகொண்டு
அன்பர்களெல்லோரும் அதிககவலையுற்று
பரிகாரஞ்செய்துமே பார்த்துவிடுவோமென்று
வைத்தியர்களெல்லோரும் மன்னனின்பக்கத்தே
இருந்தும்பரிகரித்தார் இராப்பகலாகவங்கு
இப்படியாக விருக்கின்றபோதினிலே
எங்கும்பரவியதே இத்துக்கச்செய்தியும்
கண்டிநகரமெங்கும் கவலைமிகவுண்டாச்சு
எந்தெந்தவிடங்களிலும் இரக்கத்துடன்மனுஷர்
சதாசிவர்க்குவருத்தஞ் சடுதியாய்வந்ததென்று
பேசிக்கவலையுற்றுப் பெரிதாய்மனம்வருந்த
அப்போதுகுலத்துங்கர் அறிந்தாரேயிச்செய்தி
அன்பருடைவருத்த மறிந்தவுடனேடிவந்து
துக்கமிகுதியுடன் சுறுக்காகவோடிவந்து
மனத்திற்கவலையுடன் வருந்தியேயோடிவந்து
வருத்தத்துடனிருக்கும் மன்னற்குநல்லுதவி
செய்துவுதவையிலே சேயினைப்போலவெண்ணி
இந்தப்பெருந்துயரம் எங்கும்பரந்ததுவே
பத்திரிகைமூலமாய்ப் பரந்ததுவெங்கெங்கும்
அப்போதுசனங்களெல்லாம் அன்புமிகுதியினால்
உத்தமனருடைய உயிரினைவேணுமென்று
சாகாதிருக்கவேணும் சதாசிவமென்றுசொல்லி
பிரார்த்தனைசெய்துகொண்டு பெருந்துயரிற்றுனிருக்க

வருத்தங்குறையவில்லை வலுவாகத்தான்பெருத்த
பிணியுங்குறையவில்லைப் பெரிதாகத்தான்வளர்ந்த
இப்படியாகவே இருக்கின்றபோதினிலே

வயித்திலிங்கரும் மனைவியும் வருத்தச் செய்தியறிதல்.

சதாசிவனைப்பெற்றநற் றகப்பனும்வயித்திலிங்கம்
மன்னவனைத்தானீன்ற வயித்திலிங்கப்பிரபுவவர்
வீட்டினிலேயிருந்து வேண்டியொருபத்திரிகை
புதினம்வரைந்திருக்கும் புதியவொருபத்திரிகை
வாசிக்கும்போதினிலே வயித்திலிங்கர்கண்டாரே
வருத்தம்பெலனுமென்று மகனுக்குத்தானேயங்கு
எழுதியிருத்தல்கண்டு ஏக்கம்மிகவேகொண்டார்
ஐயையோவென்மகனுக் கதிகம்கடுமையென்று
எழுதியிருக்கிறதே யெங்கள்தலைவிதியோ
புலம்பியேயிந்தவிதம் புத்திரனைத்தானினைத்து
கலங்கியழுதாரே கண்களில்நீர்சொரிய
மனைவியுமோடிவந்து மன்னவேயென்னவென்றாள்
துக்கம்பிடித்ததென்ன துரையேநீர்சொல்லுமென்ன
அப்போவயித்திலிங்கர் அறிந்திட்டசெய்தியினை
வருத்தம்கடுமையென்று மகனுக்குத்தானுரைக்க
கேட்டநற்றாயாரும் கீழேவிழுந்துருண்டாள்
நிலத்தில்விழுந்துருண்டாள் நெஞ்சினுந்தானடித்தாள்
தலையிலடித்தாளே தன்மகனைத்தானினைத்து
கதறியழுதாளே கண்டிக்குப்போவோமென்று
ஆறாய்ப்பெருகியதே அன்னைவிட்டகண்ணீரும்
நதியாய்ப்பெருகியதே நற்றாயாள்விட்டகண்ணீர்
புலம்பியழுதாளே புத்திரனைத்தானினைத்து
கூச்சலுடனழுதாள் குமரனையெண்ணியெண்ணி
பிள்ளையைத்தானினைத்து பிதற்றியேசொல்லுகிறாள்
ஐயையோகண்டேனே ஆகாதகனவுகளும்
பல்லுவிழவேகண்டேன் பாண்கிணறிடியக்கண்டேன்

செத்தோரைக்கண்டேனே திரும்பிவரவுமையோ
எல்லாங்கெடுதியாய் இருக்கிறதேயென்றுசொல்லி
பெற்றவள்வயிறெரிந்து பெரிதுங்கலக்கமுற்று
ஈன்றாள்வயிறெரிந்து இரம்பக்கலக்கமுற்று
ஐயையோதெய்வமே அபயம்அபயமென்பாள்
காப்பாற்றிவைத்திடுவாய் கந்தசுவாமியென்பாள்
பிள்ளையுயிர்தருவாய் பிள்ளையாரேயென்றுசொல்வாள்
சிறுவனுயிர்தருவாய் சிவனேநீயென்றுசொல்வாள்
அபிஷேகம்செய்வனென்றாள் அருச்சனைசெய்வனென்றாள்
திருவிழாச்செய்வனென்றாள் தேரொன்றுதருவனென்றாள்
இந்தவிதமாக வெந்தந்தெந்தக் கோவில்கட்கும்
நேர்த்திக்கடன்களை நியமிக்கும்போதினிலே
அப்போதொருதந்தி அவர்களுக்குந்தானேவந்த
தந்தியும்வந்துவிடத் தாயாளும்ஏக்கமுற்று
மகனிற்குத்தான்கடிதோ மரணந்தான்வந்ததுவோ
பிள்ளைக்குத்தான்கடிதோ பிராணனகன்றதுவோ
என்றுமேயிந்தவிதம் எண்ணியேதன்மனதில்
ஏங்கிமிகக்கலங்கி இருக்கின்றபோதினிலே
அப்போவயித்திலிங்கர் அங்கம்மிகப்பதற
தந்தியைவாங்கியே தன்னுடையகைபதற
திறந்துமேவாசித்தார் சேதியினைத்தானுமப்போ
சன்னிவருத்தமென்றுஞ் சடுதியாய்வந்ததென்றும்
காதலூல்வந்ததென்றுங் கனக்கச்சந்தேகமென்றும்
மிகவேகடுமையென்றும் மீழலருமையென்றும்
எழுதியிருந்தசொற்கள் எல்லாமேவாசித்தார்
கேட்டுமனைவியுங் கிலேசமிகவேகொண்டு
புருடனிற்கோபங்கொண்டு புத்திரனைப்பெற்றவளும்
வாக்குவளித்திருந்தால் வந்துவிருக்காதே
வருத்தமும்வந்திராது மணஞ்செய்யச்சம்மதித்தால்
உம்மாலேயிவ்வருத்தம் உண்டாச்செம்பாலனுக்கு
கண்மணிக்குநீரழைத்தீர் கடியவருத்தத்தினை
மனத்திற்கவலையினால் வந்ததுவேயென்மகற்கு

பொல்லாதவருத்தமையோ சொல்லாமல்வந்ததுவே
இந்தக்கொடுமையினை ஏன்செய்தீரென்மகற்கு
உம்மிலுங்கொடுமைசெய்வார் உலகத்திலாருமுண்டோ
இரக்கமில்லாமையினால் என்னுடையபிள்ளையினை
பற்றுவிலாததனாற் பாலகனையிந்தவிதம்
தாங்கொணாவருத்தத்திற் றங்கவுஞ்செய்தீரே
கடவுளேபிள்ளையினைக் காப்பாற்றித்தந்திடுவாய்
ஐயையோபதறுகுது அடியேனுடைமனது
தேகம்பதறுகுது சிறுவனையெண்ணவுமே
ஏதும்பிழைவந்தா இனிமேற்றரிப்பதில்லை
சிறுவனுயிரிராட்டாச் செத்துவிடுவேனே
தப்பிப்பிழைக்காவிட்டாத் தாயுமுடனிறப்பேன்
என்றுபலவாறாய் இருகண்ணும்நீர்சொரிய
சொல்லியழுதாளே துக்கக்கரைகாணாள்
வயித்திலிங்கர்தானுமப்போ மகன்மீதுவைத்தவன்பால்
கொண்டிட்டகவலையைக் கூறமுடியாதே
செய்தேன்பெரியபிழை சிவன்தந்தபாலனுக்கு
ஐயையோவென்றாலே ஆகியதேயிவ்வருத்தம்
இன்னமுமென்னவென்ன இடருகள்தான்வருமோ
கறுமங்கள்செய்தேனென் காதலனைத்தான்வருத்த
பிள்ளையுயிர்வதைக்கும் பெரும்பாவியானனையோ
என்றுமேவயித்திலிங்கர் இரங்கிமிகவழுதார்
சொல்லிப்பலவெல்லாஞ் சோகந்தனில்முழுகி
பெற்றவிருபேரும் பெரியதுயர்க்கடலில்
மாண்டுகனனேரம் மதிமறந்துதானழுதார்
புலம்பியழுதார்கள் புத்திரசோகத்தினால்
இந்தவிதங்கலங்கி இருபேருந்தானிருந்து

வயித்திலிங்கரும், மனைவியுங் கண்டிக்குச் செல்லல்.

கண்டிக்குப்போகவேணும் கண்மணியைப்பார்க்கவேணும்
பெற்றவர்கள்சென்றுமே பிள்ளையினைக்காணவேணும்
என்றுமனத்தெண்ணி இருபேருந்தான்விரைவாய்

ஆயத்தஞ்செய்தார்கள் அங்குமேசெல்வதற்கு
உடைகளுடுத்தார்கள் உண்பொருள்தான்வகுத்தார்
கட்டுச்சாதம்செய்தார்கள் கடுவழியிலுண்பதற்கு
புகையிரதத்தேறியே போய்விடுவோமென்றுசொல்லி
இறையில்வண்டியேறியே ஏகிடுவோமென்றுசொல்லி
புருடனொடுமனைவி போனார்கள் ஸ்ரேசனுக்கு
பெண்ணும்புருடனுமாய்ப் பெற்றவனைப்பார்ப்பதற்கு
யாழ்ப்பாணம்ஸ்ரேசனில் எடுத்தாரிரண்டுதிக்கற்
அப்போதுபுகையிரதம் அதிவேகத்தோடுவந்த
காங்கேசந்துறையிருந்து கடும்வேகத்தோடுவந்து
தங்கிற்றேயாழ்ப்பாணம் சடுதியாய்த்தானும்வந்து
வயித்திலிங்கரப்போது மனைவியின்கைப்பிடித்து
ஏற்றியிறையிலிலே இருக்கவுந்தானேவிட்டு
தானுமேபின்னேறிச் சங்கையுடன்மனைவிபக்கம்
இருந்துபயணம்செய்தார் யாழ்ப்பாணம்விட்டகன்று
போகிறதேறையிலப்போ புகையினைத்தானேதள்ளி
அதிகபுகையைத்தள்ளி ஆரவாரம்செய்துகொண்டே
இரைச்சலொடுவிறுமி ஏகிறதேவிரைவாக
கூவென்றுசத்தமிட்டுக் குளறியேயோடிறது
இந்தவிதமாக இறையிலுஞ்செல்லையிலே
நாவற்குளிதாண்டி நல்லவயல்கள்தாண்டி
சாவகச்சேரிதாண்டி சங்குவெள்ளைமணல்கள்தாண்டி
சீக்கிரமிகுதியுடன் செல்கிறதேபுகையிரதம்
மீசாலைதாண்டிப்பின்னர் மிருசுவில்தானுந்தாண்டி
யாழ்ப்பாணப்பூமியிலே ஈழப்பகுதியெலாம்
தாண்டிப்புகையிரதம் சனங்களைத்தான்சுமந்து
ஆனையிறவினை அணுகியேசெல்கிறது
உப்புக்குளிகள்தாண்டி ஓடியேசெல்கிறது
பாலங்கடந்ததுவே பற்றுவிட்டியாழ்ப்பாணம்
இலங்கையிற்புகழ்ப்பெற்ற யாழ்ப்பாணப்பூமிவிட்டு
எம்பெருநாடுவிட்டு ஏகிறதேயிறையில்வண்டி
காடுசெடியூடாய்க் கனக்கவிரைவாக

செழிப்புக்குறைந்திருக்கும் சிறுகாட்டுக்குள்ளாயும்
மரங்கள்குறைந்திருக்கும் வனங்களுக்கூடாயும்
பாலைமுதிரையுடன் பலங்கொள்கருவாலி
வேம்புபலாவுடனே வேங்கைமரங்களெல்லாம்
தங்கிடும்வனங்களைத் தாண்டுகிறதேயிறையில்
காடிபுலிகளெல்லாங் கண்டுகலங்கிடவே
ஆனைக்கிழைகளெல்லாம் அதிகதிகிலடைந்து
உயிரினைக்காக்கவென்று உயர்த்தித்துதிக்கையை
ஓட்டம்பிடிக்கிறவே ஓடிந்துவிடத்தான்மரங்கள்
கலைமானினங்களெல்லாங் கண்டுவெருளடைந்து
பாய்ந்துமேசெல்லுகிற பறக்கிறவேகத்துடன்
இந்தவிதமாக எங்கெங்குங்கானகத்தில்
விலங்குவினங்களெல்லாம் மிகவும்பயந்துவிட
திகிலினைத்தான்கொடுத்துத் திரிகிறதேயிறையில்வண்டி
இந்தவிதமேசென்று எங்களுடைமாகாணத்தின்
வறண்டுவிருக்குமெங்கள் வடமாகாணவெல்லையினை
உபாரம்பதிவிலாமல் ஒத்திருக்கும்பூமியினை
மழையில்மிகக்குறைந்த மாகாணந்தாண்டிப்பின்னர்
செழிப்பானபூமியினிற் செல்கிறதேயிறையில்
வடமத்திமாகாணம் வந்தும்புகுந்ததுவே
வாவிகுளங்களொடு வயல்கள்மிகவிருக்கும்
சிற்றூற்றினோடுபல சீர்நதியோடுகிற
நற்றிறப்பூமியெல்லாம் நாடியேசெல்கிறது
கனக்கமரங்கள்நிற்கும் காடுவனங்களெல்லாம்
நீண்டமரங்களெல்லாம் நெருங்கியடர்ந்திருக்கும்
செழிப்புவனந்தாண்டி செல்லுகிறதேயிறையில்
அனுராசபுரத்தையிப்போ அணிகியுஞ்செல்கிறது
மங்களத்தோடுபல மன்னவர்கள்தானிருந்து
செங்கோல்முறைசெலுத்திச் சீராகத்தானிருந்த
தொல்பெருநகரத்தை சுறுக்காகக்கிட்டிறது
இலங்கைக்குத்தலையாக இருந்தவின்நகரத்தை
கண்டவுடன்வைத்திலிங்கர் கனக்கவேயின்பமுற்று

இந்தவிதமாக வெண்ணத்தொடங்கினரே
என்னசெழிப்பாக இருக்கிறதுஇப்பூமி
வருடம்முழுவதும் மழையிங்குபெய்கிறதே
காடுவனங்களெல்லாங் கனக்கவிருக்கிறதே
திருத்தியிப்பூமியினைச் சிறப்பாகநம்மவர்கள்
யாழ்ப்பாணத்திலிருக்கும் எங்களுடைநற்றமிழர்
செழிப்பில்லாவூரினிலே சீராயிருப்பவர்கள்
காணியொடுபூமி கனக்கவிலாதவர்கள்
கஞ்சிகுடித்துமே கடும்பசியாறிறவர்
வறுமையிற்றான்கிடந்து வருந்தியிருப்பவர்கள்
இந்தநற்பூமிகளை இன்னும்அறியலையோ
ஐயையோவெம்நாடு அதிகம்வருந்துவதேன்
இந்தவிடங்களில் எம்மவர்கள்வந்திருந்து
உழுதுண்டுவாழலாமே ஒப்பில்லாச்செல்வத்துடன்
ஏழைகளிங்குவந்தா எம்போலச்செல்வராவர்
பணக்காரரிங்குவந்தாப் பன்மடங்குசெல்வராவர்
இந்தப்பெருவளங்கள் யானுமிக்காலம்வரை
இருக்குதென்றறியலையே இவ்விடங்கள்வராமல்
வெளியூர்க்குவாராமல் விசேஷங்கள்அறியலையே
நற்பூமிகாணலையே நாடுவிட்டுபோகாமல்
என்றுபலவாறாய் எண்ணிமனத்தின்கண்ணே
அனுராசபுரத்துடனே அடுத்தபலவூருகளை
தாண்டியுஞ்செல்கிறாரே சதாசிவன்தந்தையரும்
இந்தவிதமாக இராமுழுதுஞ்செல்கிறார்கள்
இரவுபகலாக இருந்ததுபோற்சந்திரனும்
பிரகாசஞ்செய்ததுவே பெருமையுடனெங்கெங்கும்
ஓடுவதும்நிற்பதுவும் உள்ளுக்கிருப்பவற்கு
தேகம்அலுத்துவிடச் செய்வதுவுமாகறையில்
மாகோவுந்தாண்டிப்பின்னர் வலுகெதியாயோடிறது
வயித்திலிங்காரவலுடன் வளமானநாடுகளை
செல்வமிருக்கிற சீரானநாடுகளை
இருந்துஇறையிலிலே இருகண்ணுற்பார்த்தாரே

மலைகள்சிலகண்டு மகிழ்ச்சிமிகவேகொண்டார்
பள்ளமும்மேடுகளும் பார்த்துமிகத்தான்மகிழ்ந்தார்
தோட்டங்கள்கண்டாரே சொல்லருந்தொகையாக
வாழைகமுகுத்தோட்டம் வரம்புவிலாமலுக்கு
கண்டுமகிழ்ந்தாரே கண்டிக்குப்போம்வழியில்
தென்னமரங்களெல்லாந் திறமாகவளர்கிறதை
அதிசயங்கொண்டாரே யவருமேகண்டவுடன்
ஏழெட்டுக்குலைகளிலே இருக்கிறதுதேங்காயென்றார்
இளனிக்குலைகளுடன் இருபானொடைந்துவென்றார்
குலைக்குவொருநூறு குறைந்தகணக்கென்றார்
பத்துமரம்போதுமென்றார் பணக்காரனாயிருக்க
ஐந்துமரமோர்குடிக்கு அதிகமேயாகுமென்றார்
ஆளுக்கொருமரம் அதுவுங்கனக்கவென்றார்
இந்தவிதச்செல்வம் இருக்கின்றநாடுகளை
பார்த்துமிகமகிழ்ந்து பயணத்திலின்பமுற்று
இருக்கின்றபோதினிலே இறப்பர்வளர்தோட்டங்கள்
கண்டவுடன்வயித்திலிங்கர் கைகாட்டிக்கேட்டாரே
பக்கத்திருந்தபேரை பட்சமுடன்தானேகேட்டார்
இந்தமரங்களென்ன எனக்கெடுத்துரையுங்கள்
தயவுமிகவேசெய்து சாற்றிடுங்கள்பேரையென
இறப்பர்மரமென்று எல்லோருஞ்சொன்னார்கள்
இலட்சப்பிரபுகளை எழுப்பிவிடும்மரமிதென்றார்
பொன்னேமரமானாற் போனாலுமென்றுசொன்னார்
அப்போவயித்திலிங்கர் ஆனந்தமிகுதியுடன்
இவ்விதச்செல்வங்கள் எனக்குமிருந்தாலோ
என்றுமிகவாசைகொண்டு எண்ணியிருக்கையிலே
புகையிரதம்போகிறது புகழ்ப்பூமியூடாக
குருநாக்கல்தாண்டியே கூவிமிகவோடிறது
பொத்துகரையுந்தாண்டிப் பொல்காவலையுந்தாண்டி
திரும்பியேயோடிறது திறமானகண்டிநாடி
விடியத்தொடங்கிறதே விசேஷமுளபூமிபோக
உயர்வானபூமிபோக உதயகாலமாகிறது

கண்டாரேயப்போது களிப்புடன்வயித்திலிங்கர்
மயக்கத்துடனேகண்டார் மலைகளுடையழகை
எண்ணமுடியாமல் எங்குஞ்சிகரங்களாய்
மேட்டுடன்பள்ளங்களாய் மிகவுமழகுடனே
பசும்புல்வளர்ந்திருக்கும் பச்சைமலைகள்கண்டார்
அழகானமலைகள்கண்டு அதிசயந்தானடைந்து
இருக்கின்றபோதினிலே இரைச்சல்மிகக்கேட்டதுவே
அப்போவயித்திலிங்கர் அதுவென்னவென்றறிய
எட்டியும்பார்த்தாரே இறையிலுக்குள்ளிருந்து
கண்டாரேயப்போது களிமிகக்கெம்பிவிட
மகாவலிகங்கையினை வயித்திலிங்கர்கண்டாரே
ஆற்றுக்கரசுசெய்யும் அந்தநதிகண்டவுடன்
மிகவுந்திறமையுள்ள விசேஷநதிகண்டவுடன்
கொண்டிட்டவானந்தம் கூறமுடியாதே
இந்தவிதமான எளிர்கள்மிகவேகண்டு
தெரியாதிருந்தவெல்லாச் சிறப்புகள்தானுங்கண்டு
ஆனந்தப்பட்டதனால் அயர்ந்துமிருந்தாரே
பிள்ளையுடைவருத்தம் பிதாவும்மறந்திருந்தார்
ஆனாலும்பெற்றவள் அதையோமறக்கவில்லை
மகனையொருநொடியும் மறக்காதேதன்மனத்துச்
சிந்தித்துத்துக்கத்துடன் சென்றாள்முழுவழியும்
இப்படியாக இருக்கின்றநேரத்திலே
ஆறுமணியுமாச்சு அணுகிவிட்டார்கண்டியினை
பொழுதுவிடிந்ததுவே போய்விட்டார்மகனூர்க்கு
கண்டியிலிரதமுங் களைப்பாறத்தங்கியது
அப்போவயித்திலிங்கர் அவர்மனைவிகையைப்பற்றி
இறையிலைவிட்டுமே இருபேருங்கீழிறங்கி
சென்றார்கள்பார்க்கவென்று திருமகன்சென்னியினை
காரென்றுதான்பிடித்து கண்டியில்வீதிசெய்யும்
நிறைவானமன்னனிடம் நேராகச்சென்றார்கள்

வயித்திலிங்கரும், மனைவியும் மகனைக்காணுதல்.

வயித்திலிங்கர்மனைவியுடன் மகனுடைவாசலிலே

வந்துமிறங்கையில் வாருங்களென்றுசொல்லி
தயவுடனோர்மனுஷன் தந்தைதாயானவரை
ஆரென்றுநீங்கள் அறியவுஞ்சொல்லுங்கள்
என்றுமேதான்மிகவும் இனிமையாய்க்கேட்கையிலே
அப்போவயித்திலிங்கர் அன்புடன்சொல்லுகிறார்
பெற்றவர்நாங்கள்தான் பிள்ளையைப்பார்க்கவந்தோம்
சொந்தமுடையார்கள் சுகவீனம்பார்க்கவந்தோம்
என்றுமேயாவலுடன் எடுத்துமுரைத்துக்கொண்டு
மகன்தங்குமறையைநாடி வயித்திலிங்கர்மனைவியுடன்
சென்றுமேதான்புகுந்தார் செல்வனைப்பார்ப்பதற்கு
அப்போகுலத்துங்கர் அங்கிருந்தடக்ரார்கட்கும்
வைத்தியரானவர்க்கும் வந்திருந்தபெரியோர்க்கும்
தாய்தகப்பன்வந்துவிட்டார் சதாசிவத்தைப்பார்க்கவென்று
எல்லோருந்தானறிய எடுத்துமுரைக்கையிலே
அப்போசதாசிவமும் அவர்களைத்தானொருக்கா
கண்ணாலேபார்த்தாரே கட்டிலிற்படுத்திருந்து
தாய்தந்தையானவரைச் சதாசிவங்கண்டவுடன்
பெரிதுங்கடிதாகப் பேந்தும்வருத்தங்கொண்டார்
சற்றேயிருந்தசுகம் சடுதியில்மாறியது
அறிவோடிருந்தமகன் அன்னைபிதாவந்தவுடன்
புத்திதடுமாறி புதிதாய்வருத்தமுற்றார்
இந்தவிதமாக ஏழெட்டுநாட்கள்சென்ற
தாயும்தகப்பனுமாய் தனயனின்பக்கத்தே
பெற்றவிருபேரும் பிள்ளையின்மாடிருந்து
இரவுபகலாக இருபேருந்தானிருந்து
மருந்துகள்பலவாக மகனுக்குவூட்டிவந்தார்
திறமானடக்டார்களும் சிங்களவயித்தியரும்
அறிவுமிகவேகொண்ட ஆயுர்வேதவைத்தியரும்
எல்லோருமாகவந்து எங்கள்துரைமகனை
கையிற்பிடித்துப்பார்த்து கனக்கவேசிந்தித்து
ஆலோசனைகள்செய்து அனைவோருமாகவங்கு
நல்லமருந்துகளை நாடியேதான்கொடுத்தார்

திறமானமருந்துகளை தேடியேதான்கொடுத்தார்
பரிகாரமிவ்வாறு பார்த்துமேவந்தார்கள்
சதாசிவற்கப்போது சற்றேசுகமும்வந்த
தேகத்திலேயவற்குச் சிறிதுசுகமுண்டாச்சு
நாடோறும்சற்றே நயமாகத்தானிருந்த
இந்தவிதமாக எங்கள்சதாசிவற்கு
வருத்தம்முழுமையும் மாறியும்விட்டதுவே
பழையசுகங்களெல்லாம் பக்குவமாய்தானேவந்த
அன்னையொடுபிதாவும் அப்போமிகமகிழ்ந்தார்
சந்தோஷங்கொண்டிருந்தார் சரீரசுகம்வந்தவுடன்
இப்படியாகவே யிருக்கின்றநாட்களிலே
குலத்துங்கரோடுநேசங் கொண்டாரேவயித்திலிங்கர்
நல்லமனிதனென்று நாவாலேதானுரைத்தார்
குணத்தில்விசேஷமுள்ள குலத்துங்கரென்றுசொன்னார்
கல்விமிகவேகற்ற கனவானுமென்றுசொன்னார்
செய்தபிழைமுழுதும் திருப்தியாய்த்தானறிந்தார்
சிங்களரைச்சிறிதாய்ச் செப்பியவைத்திலிங்கர்
கெட்டவர்களென்றுமே கீழாய்நினைத்தவர்
கண்டுவவர்களைக் கனநேரந்தான்கதைத்து
பேசியவர்களுடன் பழங்கிக்கனநாளாய்
நல்லவர்கள்தானுமென்று நன்றாயறிந்துகொண்டார்
ஒழுக்கத்தொடுகல்வி உயர்வானநாகரீகம்
எல்லாவிதங்களிலும் எங்கள்தமிழர்போல
சிறப்புவுடையாரென்று சிங்களரைத்தானறிந்தார்

வயித்திலிங்கரும் மனைவியும் குலத்துங்கர் வீடுசெல்லல்.

அப்போவயித்திலிங்கர் அன்புடனேயொருநாள்
குலத்துங்கர்வீடுசென்று கொண்டாடவேணுமென்று
கன்னியாள்லீலாவைக் காணவேவேணுமென்று
மகனுக்குவாய்த்தவொரு மங்கையோவென்றறிய

குணத்திற்சிறந்தவொரு குமரியோவென்றறிய
அழகிற்சிறந்தவொரு ஆரணங்கோவென்றறிய
ஒருநாள்வைத்திலிங்கர் உவப்பாய்மனைவியுடன்
சென்றாரேகுலத்துங்கர் சீரானமாளிகைக்கு
கண்டவுடன்குலத்துங்கர் கனக்கவேயன்புசெய்து
வாசலிலோடிவந்து வந்தனந்தானளித்து
வாருங்களென்றுசொல்லி மதிப்பாகத்தானழைத்து
கூட்டியுஞ்சென்றாரே கோவின்குலத்துதித்தார்
சென்றவுடனேயங்கு சிறப்பானலீலாவை
கூட்டியுங்கொண்டுவந்து குலத்துங்கர்காட்டினரே
அப்போவயித்திலிங்கர் ஆனந்தங்கொண்டவராய்
சந்தோஷங்கொண்டவராய்த் தனக்குள்ளேயெண்ணலுற்றார்
ஆகாவிதுவென்ன அழகுள்ளவோர்குழந்தை
கோடிதவம்செய்தாரோ குலத்துங்கர்பெற்றுவிட
பசும்பொன்னால்வார்த்தவொரு பதுமையைப்போலிருக்கு
எங்கும்நான்காணலையே இப்படியழகுதன்னை
என்மகன்பாக்கியவான் என்றதைநானறிந்தேன்
பார்த்திட்டாவோர்தரம் பசியுமேயாறிவிடும்
என்றுமேயிவ்வாறு எண்ணியிருக்கையிலே
சதாசிவத்தைப்பெற்றவள் தையலாள்லீலாவுடன்
மருமகளாகவரும் மங்கையினோடுசில
சம்பாஷணைகளைச் சந்தோஷத்தோடுசெய்தாள்
குரல்கேட்டவயித்திலிங்கர் குயிலோவெனநினைத்தார்
கேட்டவுடன்மொழியைக் கிளியென்றுதான்நினைத்தார்
இந்தவிதமாக லீலாவிலேபிரியம்
அளவுகணக்கிலாமல் அதிகபிரியங்கொண்டு
செப்பொணாவிருப்பங்கொண்டு சிறப்பானலீலாவை
மருமகள்ஆக்கிட வலுவாய்விருப்பமுற்று
கல்யாணஞ்செய்வதென்று கட்டாயம்பண்ணிவிட்டார்
கண்டிநகரத்துக் கனவான்குலத்துங்கர்
பெற்றெடுத்தவந்தப் பெண்மயிலைத்தன்மகற்கு
நீதிமானுயிருந்து நிரம்பவேகீர்த்திபெற்ற

செவ்விழுநீர்கருவிழுநீர் சிறப்பாகத்தூக்கிவிட்டார்
கொடிகள்பலவெல்லாங் கோடியாய்த்தூக்கினாரே
கடதாசியிற்செய்த கனவிதச்சித்திரங்கள்
இலைகள்குலைகளுடன் ஒளிரானபூவினங்கள்
மரங்கள்செடிகளுடன் மாக்கள்பலவெல்லாம்
குதிரையுடன்யானை கோபமிகுசிங்கமும்
ஆகாயத்திற்பறக்கும் அழகானபட்சிகளும்
எல்லாவிதமான ஒளிரானசித்திரங்கள்
எந்தெந்தநிறத்திலும் இசைவானகாகிதத்தில்
செய்துமேதூக்கினார்கள் திறமைமிகக்கொண்டவர்கள்
எங்கெங்குந்தூக்கி ஒளிராகவீதியெல்லாம்
சோடினையானவெல்லாம் துரிதத்துடனேசெய்தார்
ஆயிரக்கணக்காக அங்குநின்றுவேலைசெய்தார்
எண்ணமுடியாத இலக்கத்துப்பேர்களெல்லாம்
குலத்துங்கமுதலியார்க்கு கூலிகள்செய்யவந்தார்
நூறுபாப்பெங்கும் நுட்பமாய்ப்பந்தலிட்டார்
அழகானபந்தலை அமைக்கிறாராயிரம்பேர்
தச்சர்களுங்கொல்லர்களும் தடிகட்டுக்காரர்களும்
எல்லோருமிங்கிருந்து ஒளிர்ப்பந்தல்செய்கிறாரே
சொக்கட்டான்பந்தலிங்கு சோக்காயமைக்கிறாரே
சிவப்புக்கறுப்புடனே சேர்ந்தமற்றநிறங்களெல்லாம்
வண்ணநிறங்களெல்லாம் வகையாகத்தோன்றுகிற
ஆனைகளுங்குதிரைகளும் அழகானபட்சிகளும்
சிங்கத்தொடுபுலியும் சிறப்பானமற்றவெல்லாம்
புள்ளிமானோடுகிற புற்றரையானவையும்
தாமரைமலர்ந்திருக்கும் தண்ணீர்த்தடாகமும்
ஆற்றங்கரைகளும் அடர்ந்தவனச்சோலைகளும்
சித்திரமிவையெல்லாஞ் சீலையிற்றானெழுதி
பந்தலலங்கரித்தார் பாங்காயிவைகளுடன்
மணவறையலங்கரித்தார் மயங்கிவிடக்கண்டவர்கள்
தங்கத்தோடுபொன்னூற் றனையலங்கரித்தார்
வெள்ளியொடுமற்ற விசேஷமணிகளெல்லாம்

அழுத்தியலங்கரித்தார் அருமையாய்த்தாணிருக்க
மாணிக்கத்தோடுமே மற்றுமுள்ளரத்தினங்கள்
முத்துடன்சேர்த்துமே முழுதாயலங்கரித்தார்
பிரகாசமாயிருக்கப் பெருமையுடன்செய்தார்கள்
ஒலிக்கின்றமணவறையை ஒழுங்குபண்ணிவிட்டார்கள்
தென்னங்குருத்துகளும் சிறப்பானகமுகிலையும்
ஈச்சமிலைகளுடன் எளிரானநற்செடிகள்
மல்லிகைக்கொழுந்துகளும் மருவினுடைகொழுந்தும்
பந்தலினுள்ளேயெங்கும் படரவேவைத்துவிட்டார்
பூமாலையெங்கெங்கும் பொலிவாகத்தூக்கினார்கள்
விளக்குவினங்களெல்லாம் வேண்டியேதூக்கினார்கள்
பச்சைவிளக்குகளும் பவளநிறமுள்ளதுவும்
வெள்ளைவிளக்குகளும் விதமானநீலங்களும்
எண்ணெய்விளக்குகளும் எரிகின்றகாந்தங்களும்
மின்சாரவிளக்குகளும் வேறும்பலவெல்லாம்
தூக்கியலங்கரித்தார் துரிதத்துடனுமங்கு
கட்டியலங்கரித்தார் களிகொள்ளக்கண்டவர்கள்
பளிங்குவினமெல்லாம் பலவிடத்தேநிறுத்தினார்கள்
கண்ணாடியானவெல்லாம் கனவிடத்தேதூக்கினார்கள்
பந்தலிதுவென்றும் பளிங்குவிதுவென்றும்
கட்டியபந்தலிது கண்ணாடித்தோற்றமது
என்றுமேவித்தியாசம் எவருக்குந்தெரியாமல்
வந்தவர்களெல்லோரும் வழிதடுமாறும்வண்ணம்
கண்டவர்களெல்லோரும் கலங்கித்தடுமாற
சித்திரமறிந்தவர்கள் திறமாகச்சோடித்தார்
அலங்காரமறிந்தவர்கள் அணிவகுத்தாரிந்தவிதம்
இந்தவிதமாக எழிர்ப்பந்தர்செய்துபின்னர்
வந்தவர்களுட்கார வகைவகையாயாசனங்கள்
பெரியவர்களுட்காரப் பெருமையுள்ளவாசனங்கள்
தேடியேகொண்டுவந்து திறமாகவலங்கரித்தார்
பிரம்பினாலேயிழைத்த பெரியவிலையாசனங்கள்
மெத்தைகள்வைத்திழைத்த விலையுயர்ந்தகதிரைகளும்

எல்லாவிதமான இருக்கின்றவாசனங்கள்
கோடிக்கணக்காகக் கொண்டுவந்துவலங்கரித்தார்
சதாசிவப்பிரபுவும் தம்முடையவில்லத்தை
அலங்காரஞ்செய்துவைத்தா ரவருக்குமேற்றபடி
இல்லம்முழுவதும் இரம்பவேயலங்கரித்தார்
நல்லவிதச்சோடினைகள் நாற்புறமுஞ்செய்வித்தார்
இந்தவிதமாக இரண்டுபகுதிகளும்
செய்கிறவலங்காரஞ் செய்துமுடித்திடவே
கலியாணநாளும் கடுகெனவேகிட்டிறது
பணிகாரஞ்சுடவுமே பலபேர்களாரம்பித்தார்
வண்டிக்கணக்காக வாய்ப்பன்சுடுகிறார்கள்
பாரவண்டிக்கணக்காகப் பணிகாரஞ்சுடுகிறார்கள்
சுட்டுமடுக்கிறார்கள் தொகைதொகையாகவங்கு
பயத்தம்பணிகாரமும் பாகுடனெள்ளுவகை
தேன்குழலோடு சிறப்பானமுறுக்குவகை
அரியதரங்களும் அழகானவடையினங்கள்
கும்பிகளாகவங்கு கொட்டிவிடுகிறார்கள்
பலகாரவாஷம் பரவுதுநகரமெங்கும்
சிலிர்சிலிர்ப்புச்சத்தம் செல்கிறதயல்முழுதும்
சிங்களப்பணிகாரங்களும் சீர்தமிழ்ப்பணிகாரங்களும்
இங்கிலீசுப்பணிகாரமும் இயூரோப்புப்பணிகாரமும்
இந்தியாப்பணிகாரமும் யாழ்ப்பாணப்பணிகாரமும்
எல்லாப்பணிகாரமும் இங்குமேசெய்கிறார்கள்
கலியாணங்கிட்டுதென்று கண்டிமாநகரமெங்கும்
இருக்கின்றபேர்கள் எல்லோரும்ஆயத்தம்
செய்கிறார்களேதாங்கள் சிறப்பாகத்தானும்வர
கல்யாணம்போகவென்று கன்னியர்களெல்லோரும்
ஆபரணங்களெல்லாம் அதிகமாய்த்தேடுகிறார்
பழுக்கச்சுடுகிறார்கள் பவுணணியானவெல்லாம்
பட்டுவுடைகளெல்லாம் பதம்பண்ணிவைக்கிறார்கள்
சப்பாத்துக்களெல்லாம் சரியாய்மினுக்கிறார்கள்
இறவுக்கைபலவெல்வாம் இதமாகத்தைக்கிறார்கள்

வாசனைத்திரவியங்கள் வகையாகவாங்கிறார்கள்
சோப்புப்பவுடரெல்லாந் தொகைதொகையாய்வாங்கிறார்கள்
அத்தர்புனுகுகளும் அநேகம்பேர்வாங்கிறார்கள்
இந்தவிதமாக வெந்தெந்தவீதியிலும்
சந்தோஷமாகவே சனங்களுமெல்லோரும்
கல்யாணம்வருகுதென்று களிபோடிருக்கையிலே
கலியாணத்தினமுங் கணக்காகவந்ததுவே
இன்றைக்குக்கல்யாண மென்றபெருஞ்சத்தம்.
எங்கும்பிறக்கிறதே யிந்தப்பெரும்நகரில்

மணமகன் பெண்வீட்டிற்கு வருதல்.

மணமகன்வீட்டிருந்து வரிசைமிகுதியுடன்
வாறார்சனங்களெல்லாம் மணமகள்வீடுநாடி
எண்ணமுடியாத இலக்கத்துப்பேர்களெல்லாம்
ஆனந்தங்கொண்டவராய் அனைவோரும்வருகிறார்கள்
பட்டுடுத்தவரும் பருத்தியணிந்தவரும்
வேட்டியுடுத்தவரும் விலையுயர்ந்தசால்வைகளை
போட்டுவருபவரும் பொலிவாகமேனியிலே
சட்டைகள்போட்டவரும் தலைப்பாகைவைத்தவரும்
கால்சட்டைபோட்டவரும் கமிசுகள்அணிந்தவரும்
தொப்பிகளணிந்தவரும் சும்மாவெறுந்தலையும்
சப்பாத்துப்போட்டவரும் தைத்தநல்லசெருப்புகளை
அணியாகக்கொண்டவரும் அனைவோரும்வாறார்கள்
வயதுமுதிர்ந்தவரும் வாலிபங்கொண்டவரும்
தனியவருபவரும் தையலரைப்பக்கத்தே
கொண்டுவருபவரும் கோடிசனங்களாக
வாறாரேயெல்லோரும் வயித்திலிங்கர்மகனுடனே
சிங்களருந்தமிழர்களுஞ் சிறப்பாகவாறார்கள்
சாதிவித்தியாசங்கள் சற்றேனும்பாராமல்
ஒற்றுமைமிகுதியுடன் ஒருமித்துவாறார்கள்
பெரியமனுஷரெல்லாம் பெருமையுடன்வாறார்கள்
கார்களிலேயேறிக் கனபேர்கள்வாறார்கள்

குதிரைவண்டியேறிக் கொஞ்சப்பேர்வாருர்கள்
கால்நடையாகவுங் கணக்குஇலாமல்வாருர்
எண்ணமுடியுதில்லை இந்தத்தொகைவண்டிகளை
கணக்கெடுக்கமுடியுதில்லைக் கார்களின்முழுத்தொகையை
வீதிமுழுவதும் மிகவேநெருங்கிவாருர்
தெருவுமோகொள்ளுதில்லை சேர்ந்துவருஞ்சனத்தை
வரிசையுடைநீளம் மைல்க்கணக்காயிருக்கு
ஆனைகளும்வருகிறதே அளவுஇலாமலுக்கு
மணமகனேறிவாருர் மதிப்பானவானையொன்றில்
அலங்காரமாகவே யணிவகுத்தயானையொன்றில்
முத்துநவரத்தினங்கள் முழுதும்பதித்திழைத்த
பஞ்சமெத்தையாசனத்திற் பாங்காயிருந்துவாருர்
இந்தவிதமாக எங்கள்சதாசிவஞர்
மதிப்பாகவாருரே மணமகள்வீட்டினிற்கு
பந்தம்பிடிக்கிருர்கள் பதினுயிரக்கணக்காய்
காந்தப்பிடிக்கிருர்கள் கனபேர்களங்குநின்று
சங்கீதம்முன்னேவரச் சதாசிவஞர்வாருரே
நட்டுவமேளங்களும் நாகசுரங்களும்
புல்லாங்குழலுகளும் பொழிப்பானமத்தளமும்
சிங்களப்பறையருடை சீரானமேளங்களும்
எல்லாம்முளங்கிடவே எங்கள்சதாசிவஞர்
வாருரேபெண்ணுடை வாசலைத்தான்நாடி
மங்களமாகவே மன்னனுடைமுன்னே
நுட்பவுடைகளெல்லாம் நூற்றுக்கணக்காக
விதம்விதமாகவே வேஷங்கள்தான்தரித்து
ஆடிருர்கூத்துவங்கு ஆயிரம்பேர்கள்நின்று
காலிற்சலங்கைகட்டி கைகளில்நகையணிந்து
குண்டிநெளிக்கிருர்கள் கூத்துகள்ஆடுருர்கள்
கைகள்நெளிக்கிருர்கள் கால்களசைக்கிருர்கள்
கறணங்கள்போடுகிருர் கனக்கவேயாடுருர்கள்
இந்தவரிசைகள் எல்லாத்துடனுமே
பெண்வீட்டைநாடியே பெரியவிந்தவரிசையுடன்

எல்லோரும்வாருர்கள் லீலாவின்வீடுநாடி
பந்தலின்வாயிலிலே பாங்காகமாப்பிளையும்
வந்துமிறங்கையிலே வாணவகைகளெல்லாம்
கொழுத்திவிடுகிருர்கள் குறைவில்லாவாணங்களை
ஆயிரம்வாணங்களை அப்போகொழுத்திஞர்கள்
காவடிவாணங்களைக் கனக்கக்கொழுத்திஞர்கள்
மத்தாப்புக்கொழுத்திஞர்கள் மங்களவவிட்டுவிட்டார்
கோட்டையெனும்வாணம் கொழுத்தியழகுசெய்தார்
இந்தவிதமான எளிரானகாட்சியுடன்
வந்துமிறங்கிஞரே மணமகள்வாசலிலே
சதாசிவர்வந்தாரே தையலாள்லீலாவிடம்

கல்யாண மண்டபம்.

சங்கையுடனழைத்துச் சதாசிவரைச்சென்ருர்கள்
மதிப்புடனேயழைத்து மன்னவரைக்கொண்டுசென்று
மணவறையிலுட்கார மாப்பிளையைவைத்தார்கள்
மெத்தையாசனத்தில் மெதுவாகச்சதாசிவரும்
இருக்கின்றபொழுதிலே இன்பமணக்கிரியையெலாம்
செய்யத்தொடங்கிஞர் சிறப்பானநற்குருக்கள்
பிராமணச்சிரேட்டஞர் பிரியமிகவேவைத்து
வேதம்விதித்தபடி வேண்டியகிரியையெல்லாம்
செய்யவுந்தொடங்கிருர் சிறப்பாகவங்கிருந்து
அப்போநடக்கிறது அழகானபந்தலுள்ளே
எளிரானபந்தலிலே எல்லோருமின்பமுற
தேவடியாள்களங்கு சிறப்பாகவாடுகிருர்
தோகையினைப்போலவே தூக்கியேதந்துயிலே
சுற்றிச்சுழன்றுமே சுறுக்காகவாகிடுருர்
கொங்கைகுலுங்கிவிடக் கூத்துகளாடுகிருர்
கைகளசைக்கிருர்கள் கண்களைவெட்டுகிருர்
மெய்கள்குலுக்கிருர்கள் மெதுவாய்நடக்கிருர்கள்
கண்டவர்களுயிரைக் கவர்ந்துபிடிக்கிருர்கள்
வந்திருக்குமாடவர்கள் மையலிற்ருன்விழுருர்
தங்களைத்தான்மறந்து சனங்களனைவோரும்
மெய்மறந்திருக்கையிலே மென்குயிலோசையினிற்

தேவடியாள்களங்கு தேன்சுரக்குமோசையிலே
பாட்டுகள்பாடிவிடப் பரவசமாகிறுர்கள்
இன்பக்கடலிலே எல்லோருமிவ்விதமாய்
ஆனந்தங்கொண்டுவிட ஆடல்முடிந்தவுடன்
சங்கீதமிகவேகற்ற சரியானநட்டுவர்கள்
நாகசின்னமூதியே நயமாகத்தானிருக்க
பந்தலினுள்ளிருந்து பார்க்கிறபேர்களெல்லாம்
கண்ணுடித்தோற்றங்களை காட்டியதுமெய்யென்பார்
உண்மையெதுவென்றும் உருவமெதுவென்றும்
தெரியாதிருக்கையிலே சிலபேர்களோடிப்போய்
கண்ணுடியுள்ளங்கு காணுகிறபந்தலிலே
போயுமிருப்போமென்று போயிடிப்பார்பளிங்குகளை
வெட்கமுறுவார்கள் வேட்டிகளர்வதுபோல்
இந்தச்சபையினிலே இருக்கிறபெண்களெல்லாம்
மாப்பிளேயைப்பார்த்துமே மையலுங்கொள்ளுறுர்கள்
என்னவழகான இந்தநல்மாப்பிளே
எனக்குக் கிடைக்கவில்லை என்றுமே துக்கங்கொள்வார்
ஆசைமிகுதியா லதிகநேரம்பார்த்துவிட்டு
தங்கள்கணவரைச் சடுதியாய்ப்பார்ப்பார்கள்
கணவனுங்கண்டுவிட்டாக் கனக்கவேகோபங்கொள்வார்
என்றும்சிலபெண்கள் எண்ணுவார்தம்மனதில்
வந்திருக்குமாடவரை வாட்கண்ணுற்பார்த்துமே
அழகுடையாடவரில் ஆசையுங்கொண்டுபின்னர்
சங்கையுடனிருக்கும் தைலரைப்பார்க்கிறுர்கள்
பார்த்துமேயங்கிருக்கும் பாவைபோறகன்னிசிலர்
தாந்தாமேதிறமென்று தமக்குள்நினைப்பவரும்
என்னைவெல்லப்பெண்க ளிங்கில்லையென்பவரும்
அழகானபெண்களிலே அதிககோபங்கொண்டரும்
எளிர்ப்பெண்கள்மீதிலே எரிச்சல்மிகக்கொண்டவரும்
ஆகவேபெண்களிங்கு அனைவோருமிருக்கையிலே
மணமகள்லீலாவிற்கு மதிப்பாகச்சோடினைகள்
செய்கிறுரேயங்கு சிறப்பாகத்தோழியரும்
தமிழ்ப்பெண்ணைப்போலவே சங்கையுடனுமங்கு

எளிதானவுடுப்புகளை லீலாவிற்கணிகிறார்கள்
தலையினைச்சீவிறார்கள் சண்பகம்சூட்டிறார்கள்
கொண்டையிலைக்கட்டுறார்கள் கோர்மலர்சூட்டிறார்கள்
சவுக்காரம்போட்டுநல்லாய்த் தையல்முகமினுக்கி
பவுடரும்பூசியே பதப்படுத்திச்சென்னியினை
நெற்றியில்விபூதி நிரம்பவணிந்தபின்னர்
குங்குமப்பொட்டுமிட்டார் கோதையாள்லீலாவிற்கு
பொன்னாலலங்கரித்த பொலிவானசேலையினை
ரோசாப்பூப்போல்நிறங்கொள் உயர்வானபட்டுடையை
உடுத்தியலங்கரித்தார் ஒப்பில்லாப்பெண்மணிக்கு
கட்டியலங்கரித்தார் காமனும்மயங்கிவிட
சேலையுடுத்திப்பின்னர் சிறப்பானநகையினங்கள்
போடவுந்தொடங்கினார் பூவையாள்லீலாவிற்கு
கெட்டிக்கொலிசுகளும் கீழ்ப்பாதம்நற்சரமும்
அட்டியல்கம்மலுடன் அழகானமுத்துமாலை
ஒட்டியாணம்பவுனாலே ஒழிப்பதக்கம்ரத்தினத்தால்
மூக்கிற்குமின்னியும் முழுவைரத்தாலேயாம்
தலையிலிருந்துமே தையலாள்கால்வரையும்
நகைகள்பலவணிந்து நங்கைக்கழகுசெய்தார்
அத்தர்புனுகுகளும் அதிகவாசமுள்ளசென்றும்
பூசியேலீலாவைப் பூவாஷசமாகவைத்தார்
இந்தவிதமாக எளிதானலீலாவை
தேவலோகப்பெண்களினும் திறமுடையலீலாவை
அழகுகள்செய்துமே அணிவகுத்துமுடிந்தபின்னர்
கன்னியாள்லீலாவுங் கண்ணாடியிற்பார்த்து
தன்னழகைக்கண்டு தானும்மயங்கலுற்றாள்
உண்டானசந்தோஷத்தை உரைக்கவுமியலாது
இப்படியாக இருக்கின்றநேரத்திலே
மணமகளையழைத்துமே வாரவுஞ்சொன்னார்கள்
அப்போதுலீலாவை அழைத்துமேகொண்டுசென்றார்
மணவறையிலேயங்கு மதிப்பாயிருக்கவைத்தார்
மன்னவன்பக்கத்தே மங்கையும்வந்திருந்தாள்
சபையிலிருக்கின்ற சகலோருமப்பொழுது

மணமகன்மணமகளை மயங்கியேபார்க்கலுற்றார்
கண்ணிமைவெட்டாமற் கனநேரம்பார்க்கலுற்றார்
கண்டுமேமெய்மறந்து களறுற்றார்களிந்தவிதம்
மாரனுமிரதியும் வந்தாலேபோலுமென்பார்
அரனாரொடுவம்மை அங்குவந்தாற்போலுமென்பார்
அரியுந்திருமகளும் அமைந்ததுபோலுமென்பார்
இராமரொடுசீதை இங்கிருந்தாற்போலுமென்பார்
அழகினுடைரூபத்தை அறிந்தோமேயின்றுவென்பார்
அழகினைநாமெல்லாம் அரூபமென்றேநினைத்தோம்
அதுவும்பிழையென்று அறிந்தோமேயின்றுநாமும்
அழகுதான்ரூபங்கொண்டு அந்தவரிவையாச்சு
என்றுமேபலபேர்கள் இந்தக்களரியினில்
எடுத்துமுறைசெய்து இன்பத்தோடிருக்கையிலே
மணத்தின்கிரியையெலாம் மதத்திற்குரியபடி
இந்துமதத்திற்கு மேற்றபடியாக
பிராமணசிரேஷ்டரும் பிரியமிகவேகொண்டு
ஐந்தாறுபிராமணர்கள் அதிகபிரியத்துடன்
செய்துவருகிறார்கள் சிறப்பாகத்தானுமங்கு
குடங்களிற்சலமெடுத்துக் கும்பங்கள்தானேவைத்து
நவதானியங்களெல்லாம் நன்றாகவேபரப்பி
ஓமக்கிடங்குவெட்டி உண்டாக்கித்தீயதனை
ஆகுதிவளர்த்தார்கள் அழல்மிகத்தானெரிய
நெய்யினில்வார்த்து நிரம்பவேதீயெரித்து
தேங்காயெடுத்துடைத்து தியானித்துக்கடவுளையும்
பூசைபலவேசெய்து பொற்றாலிகட்டுமென்று
ஐயருஞ்சொல்லையிலே அப்போசதாசிவனார்
கடவுளைத்தியானித்துக் கழுத்தினில்லீலாவிற்கு
சூட்டினார்மங்கிலியம் சுகவாழ்வைப்பெற்றுவிட
மங்கிலியஞ்சூட்டையிலே மதிப்பாகச்சங்கீதம்
நாகசுரங்களெலாம் நன்றாய்முழங்கியவே
வாணங்களெல்லாம் வகைவகையாய்த்தானெழுந்த
அவிட்டுவாணங்களெல்லாம் அதிர்ச்சியுடன்தானெழுந்த
சக்கரவாணமெலாந் தாமாகவேசுழன்ற

மத்தாப்புவாணமெலாம் வரிசையாய்த்தானெழுந்த
தாலியுங்கட்டிப்பின்னர் சதாசிவமும்லீலாவும்
மணவறைசுற்றினார்கள் வாழ்க்கைத்துணைவர்களும்
அரசாணிசுற்றினார்கள் அம்மிமிதித்தார்கள்
அருந்ததியைப்பார்த்து ஆணையுமிட்டார்கள்
மணமகன்மணமகளை வந்திருந்தபெரியோர்கள்
அறுகுடனரிசியினில் அள்ளியிருகையாலே
தம்பதிகளானவர்கள் தலைமீதுதானேயிட்டு
அன்புடன்வாழ்த்தினார்கள் அதிககாலம்வாழுமென்று
புகளோடிருந்துமே புத்திரரைப்பெற்றிடுவீர்
என்றுமேபெரியோர்கள் இசைவாகவாழ்த்திவிட்டார்
இந்தவிதமாக இனியமணந்தான்முடிய

எல்லோரும் விருந்துண்ணல்.

விருந்தினையுண்பதற்கு விருப்போடெழுந்தார்கள்
பந்தியிலேதானிருந்து பலகாரம்புசிப்பதற்கு
விரும்பியபொருளங்கு வேண்டியேயுண்பதற்கு
எல்லோருமாயெழுந்து இசைவாகப்போனார்கள்
மேசைகளிலேயங்கு மெத்தநல்லபணிகாரம்
ஆசையுடனிருந்து அனைவோரும்சாப்பிடுறார்
வட்டமாய்த்தானிருந்து வகுத்திருந்தமேசைகளில்
எட்டியெடுத்துமே எல்லோருஞ்சாப்பிடுறார்
பெண்களுமெல்லோரும் பிறிம்பாகவோர்புறமாய்
கண்களொருபுறமும் கைகளொருபுறமும்
வாய்களொருபுறமும் மனத்தினில்வேறுவொன்றும்
ஆகவேயெல்லோரும் அழகாகத்தானிருந்து
உண்ணுகிறார்களே உயர்தரப்பணிகாரங்கள்
ஆயிரம்வேலைக்காரர் அங்குமிங்குமோடுகிறார்
வாயினிற்போடுறார்கள் வாய்த்ததேசமயமென்று
வெறுந்தட்டுக்கொண்டுபோறார் வேலைசெய்வோரிற்சிலர்
நிரம்பவேகொண்டுவாறார் நினைக்கவும்முன்னாக
வெட்கமில்லாமலுக்கு விருந்தாளியோர்சிலவர்
சட்டையின்சாக்குகளைச் சரியாய்நிரப்பிறாரே

இப்புத்தகம் பெற்றுக்கொள்ளுமிடம்:-

மெய்கண்டான் அச்சியந்திரசாலை

99, ஆதிருப்பள்ளித்தெரு

கொழும்பு.

ஒரு டசின் அல்லது மேற்பட இப்புத்தகம் வாங்குபவர்கட்குத் தொகைக்குத் தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.